உ

கடவுள் துணை,

குள்ளத்தாராசிந்து.



சென்னை:

ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை —— பை-ரு.

1905.

விளம்பரம்

இதனால் சகலமானபேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில், சென்னை பெருமாள்கோவில் க-வது-சந்து உள. நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் "ஸ்ரீமாதவவிலாச" அச்சியந்திரசாலையில் நானாவிதமான தமிழ், தெலுங்கு, துலுக்கு, இங்கிலீஷ், வைத்திய ஜோஸ்ய புத்தகங்கள் உண்டு. தேவையானவர்கள் அடியிற்கண்டவிலாசத்துக்கெழுதிபெற்றுக் கொள்வதும் தவிர, பட்டா, முச்சலிக்கா, விவாகப்பத்திரிகை, நோட்டீஸ் முதலானதும் வேலை நாணயமாயும், சார்ச்சு குறைவாயும் செய்து தரக்கூடும்.

இப்படிக்கி,

ஸ்ரீ ம. திருவேங்கடமுதலியார்,

நெ. உள, பெருமாள்கோவில் முதல்சந்து,

சௌகார்பேட்போஸ்ட்,

சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

குள்ளத்தாராசிந்து.

விநாயகர் - வணக்கம்.

விருத்தம்.

சிந்துசூழுலகிலுள்ளோர் திரளபலங்கொள்ளவேண்
விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதிமாலைதன்னை
கந்தமார்சிந்தாய்கூறக் கரிமுகனுபயபொற்பூங்
கொந்தலர்க்கழலைநாளுங் கூப்பியேபணிகுவாமால்.

நான்முகம்.

சிந்து—கண்ணிகள்

சித்திவிநாயகனை ஏ-குள்ளத்தாரர்நீ
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா

ஏகுலிக்கி தில்லாலேநீ முன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா க

பாடலீசன்பொற்பதத்தை ஏ-குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா உ

பேர்பெரியநாயகியை ஏ-குள்ளத்தாராநீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா ௩

வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா ௪

வள்ளிதெய்வானைபதம் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௫

ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
யன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௬

செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா ௭

தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராநீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௮

ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா-என
தன்பின்வழியேநடக்கிற குள்ளத்தாரா ௯

சந்த்ரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா-வதைச்
சாரவும்பொன்னெணியுண்டு குள்ளத்தாரா ௰

பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா-வதைப்
பற்றப்பரிசுத்தனுண்டு குள்ளத்தாரா ௰௧

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமூர்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா ௰௨

எமனுமடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா ௰௩

இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாரா-சொல்
இருவினையகன்றிடுவாய் குள்ளத்தாரா ௰௪

கட்டி-லுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா-நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா ௰௫

தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-ரத்ன
சடையில்லைதானுமுண்டு குள்ளத்தாரா ௰௬

சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா-வதைச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா ௰௭

காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-நல்ல
கம்மல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா ௰௮

கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா-நற்
கொந்தளப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா ௰௯

கத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா-நல்ல
கனத்தசம்புலுமுண்டு குள்ளத்தாரா ௨௰

நத்துமூக்குத்தியுண்டு குள்ளத்தாரா-நீ
நாணயமாய்ப்பூட்டிக்கொள்ளக் குள்ளத்தாரா. ௨௧

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா ௨௨

கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா ௨௩

இடையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா
இசைந்தஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா உச

பாதசரந்தண்டையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உரு

விரலிற்றரித்திடவுங் குள்ளத்தாரா-வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா உசா

இழையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா-உனக்
கிந்திரவன்னச்சேலையுண்டு குள்ளத்தாரா உஎ

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா-திகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா உஅ

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா-உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா உகூ

தங்கத்தாலே கிண்ணியுண்டு குள்ளத்தாரா-நீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா ௩௰

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா-நீ
வேணதையனுபவிப்பாய் குள்ளத்தாரா ௩க

கைபிடிக்கக்கால்பிடிக்கக் குள்ளத்தாரா-சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா ௩உ

ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா-உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா ௩௩

தந்தநாற்காலியுண்டு குள்ளத்தாரா-நீ
சார்ந்துகொண்டிருப்பதற்குக் குள்ளத்தாரா ௩ச

சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா-என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா ருரு
பொன்னுஞ்சற்பலகையுண்டு குள்ளத்தாரா என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா ருசா
நன்னயமாய்பேசுதற்கு குள்ளத்தாரா-நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா ருஎ
மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனரனேகருண்டு குள்ளத்தாரா ருஅ
சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா ருகூ
தென்னமரச்சோலையுண்டு குள்ளதாரா-நீ
சிந்தைகளித்தாடவடி குள்ளதாரா சாய
பாக்குமரச்சாலையுண்டு குள்ளதாரா-நீ
பந்துவிளையாடவாடி குள்ளத்தாரா சாக
கற்பகத்தருவுமுண்டு குள்ளதாரா-நீ
கருதியதெல்லாந்தரக் குள்ளதாரா சாஉ
கெடிலநதியுமுண்டு குள்ளதாரா-வதின்
கிளர்கடுக்காலுமுண்டு குள்ளதாரா சாரு
உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா-இந்த
வுலகம்பொருக்கலையே குள்ளத்தாரா சாச
அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
பண்புடனருகில்வாராய் குள்ளத்தாரா சரு

கிள்ளைநேர்மொழியினாளே குள்ளத்தாரா-நீ
கிருபைசெய்துவாராயோடி குள்ளத்தாரா சசு

மயில்போலுஞ்சாயலாளே குள்ளத்தாரா-என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா சஎ

அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா-உன்
னகமுமிரங்காதோடி குள்ளத்தாரா சஅ

அடைக்காயும்வெள்ளிலையுங் குள்ளத்தாராவெனக்
கருந்தவரியாயோடி குள்ளத்தாரா சகூ

வாசனைதிரவியங்கள் குள்ளத்தாரா-நீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா ருய

சண்பகமலர்நிதமும் குள்ளத்தாரா-நீ
சம்பிரமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா ருக

பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தாராநீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா ருஉ

பாலுநீரும்போலவடி குள்ளத்தாரா-நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா ருங

மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா-இந்த
வையகமுள்ளளவுமடி குள்ளத்தாரா. ருச

குள்ளத்தாராசிந்து
முற்றிற்று.

இந்த நம்பர்

பொட்டது

20-10-1991